# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti.**

**Case No. C.C – 110/2019**

**Deposition of Witness for Prosecution : P.W.11**

| | | | |
|---|---|---|---|
| Name | : பாக்கியமேரி | Caste | : |
| Father/Husband Name | : முடியப்பன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 14.05.2026.**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ராஜபாளையம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 08.04.2019ம் தேதி ஆ. கல்லுப்பட்டி காவல் நிலையத்தில் பணிபுரிந்த போது பொறுப்பு பணியான T. இராமநாதபுரம் காவல் நிலையத்தில் பணியில் இருந்த போது குற்ற எண். 20/2019 இதச பிரிவு 341, 2945(b), 323, 324, 506(2), படி வழக்கை பார்வையிட்டதில் சிறப்பு சார்பு ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து எதிரியை கைது செய்தும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பியும், 1 முதல் 9 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்தும், 161(3) வாக்குமூலம் பதிவு செய்தும், விசாரணையை முடித்து எனது பார்வைக்கு வைத்திருந்த வழக்கு கோப்பை பார்வையிட்டு, 1 முதல் 9 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்ததில் சிறப்பு சார்பு ஆய்வாளர் அவர்களிடம் சொன்னது போல் என்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. மேலும், இந்த வழக்கை இதச பிரிவுகள் 341, 2945(b), 323, 324, 506(2)லிருந்து சட்டப்பிரிவு மாறுதல் செய்து இதச பிரிவுகள் 341, 2945(b), 324, 506(2)ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த டாக்டர் சங்கர் என்பவரை விசாரித்து

வாக்குமூலம் பதிவு செய்து, காயச்சான்று பெற்றேன். பின்னர் சார்பு ஆய்வாளர் வெங்கடேசனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக சம்பவம் உண்மையென தெரியவந்நதால், எதிரிகளின் மீது மேற்சொன்ன பிரிவுகளின்கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் அனைத்து ஆவணங்களையும் பார்வையிட்டுதான் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விசாரணையில் எதிரியின் குடும்பத்திற்கும், புகார்தாரர் குடும்பத்திற்கும், புகார்தாரரின் மாமியார் குடும்பத்திற்கும் இடம் சம்பந்தமாக பிரச்சனை இருந்தது தெரியவந்தது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை சம்பந்தமாக R.D.O நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பு அ.சா.1 மற்றும் அ.சா.2 T. இராமநாதபுரம் மற்றும் எழுமலை காவல் நிலையத்தில் வேறு ஏதேனும் புகார் கொடுத்துள்ளார்களா என்றால் தெரியாது. அ.சா.1 எனது விசாரணையில் எனது மாமியார் மாரியம்மாள், அவருக்கு சொந்தமான வீடு T. இராமநாதபுரத்தில் உள்ளது என்றும், அந்த வீட்டிற்கு எதிரியும், அவரது அம்மாவும் சொந்தம் கொண்டாடி பிரச்சனை செய்தார்கள் என்றும், 01.03.2019ம் தேதி மதியம் நேரத்தில் எதிரியும், அவரது அம்மாவும் பிரச்சனை செய்தார்கள் என்றும், அதனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும், 15 நாட்களாக விசாரணை செய்தார்கள் என்றும், விசாரணையை எதிரியை எச்சரித்தார்கள் என்றும், பின்னர் நாங்கள் வீட்டில் சிறு சிறு வேலைகள் செய்து கொண்டிருந்தோம் என்றும், பின்பு 15 நாட்கள் கழித்து மதியம் நேரத்தில் எதிரியின் அம்மா மீண்டும் பிரச்சனை செய்தார்கள் என்றும், அது சம்பந்தமாக எழுமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும், 2 நாட்கள் கழித்து வரச்சொன்னார்கள் என்றும் வாக்குமூலம் கொடுத்துள்ளரா என்றால் இல்லை. எனது விசாரணையில் புகார்தாரர் தன்னுடைய வாக்குமூலத்தில் எதிரி தன்னை முதுகில் ஓங்கி அடித்தார் என்றும், பின்னர் அவரது நெஞ்சில் ஓங்கி மிதித்தார் என்றும், சொல்லியுள்ளரா என்றால் சொல்லவில்லை. மேலும், மயங்கி விழுந்துவிட்டதாக விசாரணையில் சொல்லியுள்ளரா என்றால் சொல்லவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எழுத்து பூர்வமாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், வாக்குமூலமாக கொடுத்துள்ளார். அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்யையில் காலம் 4-ல் தகவலின் தன்மை எழுத்து மூலமாக என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1 எழுத்து பூர்வமாக புகார் கொடுத்தார்

என்றும், அதை நான் மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. அ.சா.2 எனது விசாரணையில் எதிரி எனது கணவரின் பின் தலையில் ஓங்கி அடித்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும், எனது கணவரின் நெஞ்சில் ஓங்கி மிதித்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், பின் கழுத்தில் அடித்ததாக சொன்னார். அ.சா.2 எனது விசாரணையில் எனது அம்மாவுக்கும், எதிரிக்கும் இடப்பிரச்சனை சம்பந்தமாக எழுமலை காவல் நிலையத்தில் எதிரியின் மீது புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றும், இந்நிலையில் 18.03.2019ம் தேதி இரவு 08.00 மணியளவில் எழுமலை காவல் நிலையத்தில் விசாரணை முடித்த நானும், எனது கணவரும் சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வரைபட்ட வரைபடத்தில் சம்பவ இடம் 2 இடங்களாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்கண்ட வரைபடத்தில் அருகில் உள்ள வீடுகளான ஜெயசீலன், வக்கீல் சுந்தர்ராஜ், பாண்டி ஆகியோரை சாட்சிகளாக வழக்கில் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வரைபடத்தில் சாட்சிகளான பாண்டி, பெருமாள், மல்லிகா ஆகியோரின் வீடுகள் இல்லை என்றால் சரிதான். வழக்கில் எதிரி தாக்கியதாக சொல்லப்படும் கட்டை கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். நான் வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட பிறகு 08.04.2019ம் தேதி T. இராமநாதபுரத்தில் வைத்து சாட்சிகளை விசாரணை செய்தோம். மேற்படி தேதியில் அ.சா.1 மற்றும் அ.சா.2ஐ நான் விசாரிக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது புலன் விசாரணையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பே சம்பவ இடத்திற்கு போலீசார் சென்றார்களா என்றால் அது பற்றி தெரியாது. நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் ஏற்கனவே சரியாக விசாரணை செய்யாத சிறப்பு சார்பு ஆய்வாளரின் வழக்கு கோப்பை பார்வையிட்டு ஆய்வு செய்யாமல் அப்படியே எதிரிக்கு எதிராக ஒரு தலைபட்சமாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன போல் சொன்ன நேரத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றும், சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றாலும் சரியல்ல. அ.சா. 1 கொடுத்த பொய்யான வாக்குமூத்தை பெற்று சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும், இவ்வழக்கில் சரிவரபுலண்விசாரணை செய்யப்படாமல், குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1வது எதிரியை விசாரணை என்ற பெயரில் நிலையத்திற்கு அழைத்து கைது செய்துள்ளார்

என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்க்கும் எவ்வித சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.05.15 17:16:06 +0530